31st March 1969]

Allotment of Motor Boats

*301 *Q* —THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether the trained Fishermen Association of Ramanathapuram district has submitted a memorandum to the Government in July 1968 ;

(*b*) whether they have objected to the allotment of Motor Boats to untrained fishermen instead of to fully trained fishermen: and

(*c*) if so, the reasons therefor ?

விசைப் படகு வழங்கல்

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) 1968 ஜூலையில் இராமநாதபுரம் மாவட்டம் மீனவர் பயிற்சி யுற்ரேர் சங்கத்தினர் தமிழக அரசுக்கு ஒரு மகஜர் அனுப்பினூர்களா ?

(இ) முழுதும் பயிற்சி பெற்றவர்களுக்கு விசைப் படகு கொடுக்காமல் பயிற்சி இல்லாதோர்க்கு விசை படகு கொடுத்ததை ஆக்ஷேபனை செய்தார்களா ?

(உ) ஆம் எனில் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு எ. கொவிந்தசாமி : (அ) அண்டு (இ) ஆம்.

(உ) மீனவர்களுக்குப் படகுகளைப் பகிர்ந்தளிப்பதில், மேலும் நியாய மான பகிர்ந்தளிப்பும், பரவலான வாய்ப்பும் கிட்டுவதற்காக ஒதுக்கீட்டு முறையை அரசு 1968 ஜூனில் மாற்றியமைத்தது. "அனைவரும் பயிற்சி பெற்றவர் தொகுதி"க்கு இதுவரை அதிகமாக அளித்துவந்த முன்னுரிமை இனி அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லையென்றும் "அனைவரும் பயிற்சி பெற்றவர் தொகுதி"யும் "ஒருவர் அல்லது பலர் பயிற்சி பெற்ற தொகுதி யும்," "பயிற்சி பெற்றவர் தொகுதி" என்னும் ஒரே தொகுதியாக இணைக் கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு மாவட்டத்திலும் கிடைக்கக் கூடிய மொத்தப் படகுகளின் ஒரு பாதி (50 சதவீதம்) "பயிற்சி பெற்றவர் தொகுதி யினருக்கும்" மறு பாதி "பொதுத் தொகுதியினருக்கும்" அதாவது பயிற்சி பெற்றவர் எவருமே இல்லாத தொகுதியினருக்கும் கொடுக்கப்பட வேண்டும் என்றும் அரசு கருதியது.

Red Sanders

*302 *Q.*—THIRU N. R. THIAGARAJAN : Will the Hon. the Minister for Food and Agriculture be pleased to state—

(*a*) whether Red Sanders is grown in the forests of Tamil Nadu; and

(*b*) If so, the extent in which it is grown?

செம்மரங்கள்.

திரு. என். ஆர். தியாகராஜன்: மாண்புமிகு உணவு-வேளாண்மை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) ரெட் சாண்டர்ஸ் என்னும் மரம் தமிழக காடுகளில் பயிரிடப் படுகிறதா ?

(இ) ஆமெனில், எத்தனை ஏக்கர் பயிரிடப்படுகிறது ?